**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**
************

**<u>ஊடக அறிக்கை</u>**

**<u>இலங்கை மீனவர்கள் இந்தியாவால் மீட்பு</u>**

இந்தியாவுக்கும் இலங்கைக்கும், அதேபோல இருநாடுகளினதும் மக்களுக்கும் இடையே உள்ள நல்லெண்ணத்தையும் நட்புறவையும் பிரதிபலிக்கும் வகையிலான மனிதாபிமான சமிக்கையாக இந்திய மீன்பிடிக் கப்பல் ஒன்று, ஆபத்தில் சிக்கியிருந்த இலங்கை மீனவர்களையும் அவர்களது படகையும் மீட்டுள்ளது.

2. IMUL-A-0039-TLE பதிவு எண்ணைக் கொண்ட Lulu-01 என்ற இலங்கை மீன்பிடிக் கப்பல் 2ம் திகதி டிசம்பர் 2021 அன்று ஆழ்கடலில் பாரிய ஆபத்தை எதிர்கொண்டிருந்தது. சென்னைக்கு வடக்கே 24 கடல் மைல் தொலைவிலிருந்த இந்திய மீன்பிடிப் படகு ஒன்று இதனைக்கண்டதுடன் இலங்கைக் கப்பலினதும் அதிலிருந்தவர்களினதும் பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்டு, இலங்கை கப்பலை காட்டுப்பள்ளியிலுள்ள அதானி துறைமுகத்துக்கு வெற்றிகரமாக இழுத்துச் சென்றது. இலங்கை கப்பலிலிருந்த நான்கு மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்திய அதிகாரிகள் வழங்கியுள்ளனர்.

**********

கொழும்பு

08 டிசம்பர் 2021